சென்னையில் 7-ந் தேதி முதல்

# 5 நிமிடத்திற்கு ஒரு மெட்ரோ ரெயில் இயக்கம்

## காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை ஓடும்

சென்னை, செப்.4-

சென்னையில் வருகிற 7-ந்தேதி முதல் 5 நிமிடத்திற்கு ஒரு மெட்ரோ ரெயில் இயக்கப்படுகிறது. காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை மெட்ரோ ரெயில்கள் ஓடும்.

### மெட்ரோ ரெயில் சேவை

கொரோனா நோய் தொற்று காரணமாக கடந்த மார்ச் 22-ந் தேதி சென்னையில் மெட்ரோ ரெயில் சேவைகள் நிறுத்தப்பட்டன. தற்போது ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில் வருகிற 7-ந் தேதி (திங்கட்கிழமை) முதல் மீண்டும் மெட்ரோ ரெயில் சேவையை வழிகாட்டுதல் நெறிமுறைகளுடன் தொடங்க முதல்-அமைச்சர் உத்தரவிட்டு உள்ளார். இதுதொடர்பாக மெட்ரோ ரெயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சென்னையில் வருகிற 7-ந் தேதியில் இருந்து தினந்தோறும் காலை 8 மணி முதல் இரவு 8 மணிவரை மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படுகிறது. படிப்படியாக நேரங்களில் மாற்றம் செய்யப்படும். விமான நிலைய மெட்ரோ நிலையம்- வண்ணாரப்பேட்டை மெட்ரோ நிலையத்திற்கு (நீல வழித்தடம்) இடையில் 7-ந்தேதி முதல் அலுவலக நேரமான காலை 8.30 மணி முதல் காலை 10.30 மணி வரை மற்றும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை 5 நிமிடங்களுக்கு ஒரு ரெயிலும், மற்ற நேரங்களில் 10 நிமிடங்களுக்கு ஒரு ரெயில் வீதம் இயக்கப்படுகிறது. புரட்சி தலைவர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன் மத்திய மெட்ரோ ரெயில் நிலையம்(சென்டிரல்)- கோயம்பேடு வழியாக விமான நிலையம் செல்லும் வழித்தட சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டு உள்ளது. எனவே பயணிகள் ஆலந்தூர் ரெயில் நிலையத்தில் மாறி விமான நிலையம் செல்ல வேண்டும்.

### பரங்கிமலை- சென்டிரல் இடையே 9-ந்தேதி...

பரங்கிமலை-சென்டிரல் (பச்சை வழித்தடம்) இடையே வருகிற 9-ந்தேதி (புதன்கிழமை) முதல் காலை 8.30 மணி முதல் காலை 10.30 மணி வரை மற்றும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை 5 நிமிடங்களுக்கு ஒரு ரெயிலும் மற்ற நேரங்களில் 10 நிமிடங்களுக்கு ஒரு ரெயில் என்ற விகிதத்தில் இயக்கப்படுகிறது.

அனைத்து ரெயில் நிலையங்களும் கிருமி நாசினி தெளித்து சுத்தம் செய்யப்படுகிறது. பயணிகள் சமூக இடைவெளியை கடைப்பிடிக்கவும், பிளாட்பாரங்களில் கூட்டநெரிசலை கட்டுப்படுத்த தனியாக பணியாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர். ரெயில் நிலையங்களில் ரெயில் நிறுத்தும் நேரம் 20 வினாடிகளில் இருந்து 50 வினாடிகளாக உயர்த்தப்படுகிறது.

### முககவசம் கட்டாயம்

பிளாட்பாரத்தில் காத்திருக்கும் போதும், ரெயிலில் பயணிக்கும் போதும் பயணிகள் 6 அடி தூர இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். இதற்காக தனியாக அடையாளங்களும் சுட்டிகாட்டப்பட்டு உள்ளன. மெட்ரோ ரெயில் நிலைய வளாகத்தில் முககவசம் கண்டிப்பாக அணிந்திருக்க வேண்டும். ரெயில் நிலைய வாசல்களில் பயணிகள் காலால் இயக்கி கைகளை சுத்தம் செய்ய நவீன எந்திரமும் வைக்கப்படுகிறது. வெப்பநிலையை கண்டறியும் கருவி மூலம் சோதிக்கப்பட உள்ளனர். நோய் அறிகுறி தென்படும் பயணிகள் பயணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மெட்ரோ ரெயில் நிலையத்தில் ஆரம்பத்தில் 2 வாசல்கள் மட்டுமே திறக்கப்படும். பிற நுழைவு வாயில்கள் திறப்பது குறித்து பின்னர் முடிவெடுக்கப்படும். முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மட்டும் 'லிப்ட்' பயன்படுத்த அறிவுறுத்தப்படுவார்கள். அதேபோல் நகரும் படிக்கட்டுகளிலும் சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். பயணிகள் கொண்டு வரும் பொருட்களும் 'ஸ்கேன்' செய்யப்பட்டு, சோதனைக்கு பின்னரே அனுமதிக்கப்படுவார்கள். அதேபோல் மெட்ரோ ரெயில்களிலும், ரெயில் நிலையங்களிலும் ஏ.சி. பயன்பாடு பரிந்துரைத்த நெறிமுறைகளைப் பின்பற்றி இயக்கப்படும். எனவே பயணிகளுக்கு பாதுகாப்பு குறித்து எந்த பயமும் தேவையில்லை.

### ஆரோக்கிய சேது செயலி

ரெயில் நிலையத்திற்குள் நுழைந்த நேரத்தில் பயணிகள் 'ஆரோக்ய சேது' செயலியை பயன்பாட்டைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுவார்கள். ரெயில் நிலையத்தில் பயணிகளால் அதிகம் பயன்படுத்தப்படும் 'லிப்ட்' பட்டன்கள், நகரும் படிக்கட்டு கைப்பிடிகள், பொது கழிப்பறைகள் போன்றவை அடிக்கடி கிருமி நாசினி தெளித்து சுத்தம் செய்யப்படுகிறது. தமிழக அரசு விதித்துள்ள வழிகாட்டுதல்களின் படி மெட்ரோ ரெயில் நிலையங்களில் உள்ள கடைகள், ஓட்டல்கள் செயல்பட அனுமதிக்கப்படும்.

### டிக்கெட் கவுண்ட்டர்கள்

பயணிகளுக்கு நோய் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் ரெயில் நிலையத்திலும், ரெயிலிலும் அறிவிக்கப்படும். கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்படும். டிக்கெட் கவுண்ட்டர்களில் 'ஸ்மார்ட் கார்டுகள்' வழங்கப்படுவதுடன், ரீசார்ஜ் செய்யப்படும். அத்துடன் 'க்யூ.ஆர்' கோடு குறியீடு என்ற செல்போன் டிக்கெட்டும் வழங்கப்படுகிறது. ஒரு வழி பயணச்சீட்டுகள் ஊக்குவிக்கப்படுவதில்லை. மாறாக பயணிகளின் தேவை அடிப்படையில் சுத்தம் செய்யப்பட்ட டோக்கன்கள் வழங்கப்படும். 32 மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் வரிசையைத் தவிர்ப்பதற்காக பயண அட்டையை பரிசோதிக்கும் 'ரீடர்' எந்திரங்கள் நிறுவப்படுகிறது. பயணிகளுக்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

### சோதனை ஓட்டம்

வண்ணாரப்பேட்டை-விமான நிலையம், சென்டிரல்-பரங்கிமலை ஆகிய 2 வழித்தடங்களில் மீண்டும் மெட்ரோ ரெயில் சேவை தொடங்க உள்ளது. எனவே இந்த 2 வழித்தடங்களில் கூடுதல் ரெயில்களை இயக்கி நேற்று முதல் சோதனை ஓட்டம் தொடங்கியது. இந்த சோதனை ஓட்டத்தின்போது உயர் மின்னழுத்த பாதையில் பழுது இருக்கிறதா? சிக்னல் பிரச்சினை ஏற்படுகிறதா? வேறு ஏதேனும் தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்படுகிறதா? என்பது சரிபார்க்கப்பட்டது.